தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி.பி. 2018 சிலை (31-12-1987) திச-87 85 காசுகள் (இதழ் எண்: 97)

மதம் ஆட்சிக் கட்டிலேறினால் ஆட்சி இருண்டுவிடும்! எச்சரிக்கை!



இந்தியத் தலைமை யமைச்சர் இராசீவ் அண்மையில் தமிழ் நாடு வந்தபொழுது குருவாயூர் கோவிலுக்குப் போய்த் தம் எடைக்கு எடை சருக்கரை அளந்து துலை பாரம் நிறுத்து வழிபட்டார். பின் சென்னை வந்தபொழுது, காஞ்சி சென்று மூன்று சங்கராச்சாரிகளையும் வழிபட்டுச் சென்றார்.

வேறு வகையிலெல்லாம் அவரைக் குறைகூறிய பார்ப்பனர்கள், இராசீவின் இந்தச் செய்கைகளால், உச்சி குளிர்ந்து போயினர். மதச்சார்பு ஒன்றே பார்ப்பனத் தன்மையை உறுதிப்படுத்துவது என்பது அவர்களின் கணிப்பு. ஒருவன் எத்துணைக் கொடியவனாக, காயவனாக, அதிகார வெறிபிடித்த கொடுங் கோலனாக இருந்தாலும், அவன் பார்ப்பன (இந்து) மதத்தை மதிக்கின்றான் என்றால், பார்ப்பன இனம் அவனை மன்னித்து விடும்; பேணிக் கொள்ளும்; கட்டிக் காத்து நிற்கும். எனவே இராசீவ் இந்த வகையால் அல்லது தந்திரத்தால், பார்ப்பனர்கள் அவர்களின் அடிமைகள் ஆகியோரின் பாராட்டுதலுக்கும் நம்பிக்கைக்கும் உரியவராகி விட்டார்.

இராசீவ் குருவாயூரில் அரை நாளையும் காஞ்சியில் இரண்டு மூன்று மணிநேரத்தையும் இம் மத ஈடுபாட்டுக் கெனச் செல விட்டுள்ளார். தலைமையமைச்சர் ஒருவர்க்கு இருக்க வேண்டிய பொறுப்புகளுக்கு இடையில் ஏறத்தாழ ஒரு நாள் என்பது பல்லாயிரக் கணக்கான உருபா மதிப்பு உடையது. இத்துடன் அவருக்கும் அவரின் பரிவாரங்களுக்கும் ஆகும் போக்கு வரத்துகள், தங்கல் பாரமரிப்புகள், ஆகியவற்றுக்கான செலவுகள் வேறு இலக்கக் கணக்கான மதிப்புடையன. இவையன்றி, அவரின் பாதுகாப்புக்கான ஏற்பாடுகள் ஆகியனவும் பல இலக்கக் காணக்கான மதிப்புடையவை. இத்துணைச் செலவுகளையும் செய்து கொண்டு, அரசு வரிப்பணத்தில், அவரின் தனிப்பட்ட மத ஆசைகளை அல்லாது வெறிகளைத் தணித்துக் கொள்வது கண்டிக்கத் தக்க குற்றமாகும். சங்காராச்சாரியார் அரசியல் தொடர்புக்கு அப்பாற் பட்டவராக இருக்க வேண்டியவர். அவரிடம் ஒரு மணி நேரம் இவர் தனித்துப் பேசுகிறார் எனில், இவர் தலைமையமைச்சராக இருக்கவே தகுதியற்றவராகிறார். —

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

ஐயோ தமிழகமே!

தமிழில் பெயர்ப் பலகை!

கடந்த ஐந்தாறு ஆண்டுகளா கத் தமிழக அரசு வணிக நிறுவ- னங்களின் பெயர்ப் பலகைகளைத் தமிழில்தான் எழுத வேண்டும் என்று அடிக்கடி கட்டளைகளையும் சுற்றறிக்கைகளையும் அனுப்பி வருகிறது. ஆனால் இவற்றை முறையாகக் கடைப்பிடிக்கிறார்- களா என்பதைக் கண்காணிப்ப தில்லை. சென்னை நகரிலும், பிற தமிழக நகரங்களிலும் உள்ள ஆயி ரக் காணக்கான கடைகளில் இன் னும் ஆங்கிலப் பெயர்ப் பலகை- கள் தாமே தொங்கிக் கொண்டுள் ளன என்பதை அரசு அறியாதா? கட்டளை இட்டு விட்டால் போது- மா? அது செயல்படுத்தப் படு கிறதா என்று கவனிக்கும் பொறுப் புத்தானே மிகுதியும் தேவைப்படு கிறது. வெறும் தாள் சட்டங்க- ளும், எழுத்துத் திட்டங்களும் எதற்குப் பயன்படும்? வீண் பெரு- மைக்கு மட்டுமே அவை உதவிக் கொண்டுள்ளன.

பார்த்து எழுதினால் சிறை!

தேர்வுகளில் மாணவர்கள் பார்த்து எழுதினால் (காப்பி அடித் தால்) ஓராண்டுச் சிறை என்று தமிழக அரசு சட்டம் கொண்டு வந்திருக்கிறது. இஃது ஒரு முட்- டாள் தனமான, வெறும் கண் துடைப்பான, ஆரவாரத் தன மான, செயலுக்கு வரமுடியாத சட்டம்.

தேர்வு எழுதாமலே கையூட்- டுக் (இலஞ்சம்) கொடுத்துத் தேரச் செய்வதும், ஆயிரக் கணக்கில் பணம் வாங்கிக் கொண்டு பணி களில் அமர்த்துவதும், பெரும் பெரும் தொகைகளைப் பெற்றுக் கொண்டு, ஆசிரியர்களை இட மாறு தல் செய்வதும், அமைச்சர்களும், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பி னர்களும் அன்றாடம் செய்து வரும் அரசுப் பணிகளகவே மாறி விட்டன.

10 ஆயிரம் முதல் இரண்டு இலக்கம் வரை கல்வித்துறையில், பாலர் பள்ளி முதல் கல்லூரி வரை இடம் பிடித்தது முதல, தேர்வுச் சான்றிதழ் வழங்குவது வரை இங்கு பொதுவான வாணிகம் போலவே நடந்து வருகையில், தேர்வில் பார்த்தெழுதுவது (காப்பியடிப்பது) மட்டுந்தான் குற்றமா? திருடர்களும் கொள்ளைக் காரர்களும் குற்றவாளிகளுமே அரசியல் தலைவர்களாகி அதிகாரத் தில் அமர்ந்துள்ள நாட்டில், இது போன்ற சட்டங்கள் வெறும் எழுத்து, வாய்மொழிக் சட்டங்- களே என்பது அனைவர்க்கும் தெரிந்ததே! இதிலும் கையூட்டுக்கு வழிவைத்துக் கொள்வதே இந்தச் சட்டத்தின் நோக்கமோ?

வேகிற வீட்டிற்கு வெட்டுகிற கிணறுகள்!

ஏழாவது திட்டத்தின் கீழ் 1988-89-இல் மின்சார ஆக்கத்- திற்குத் தமிழக அரசு 500 கோடி உருபாவுக்கு மேல் செலவிடத் திட்ட மிட்டிருக்கிறது. இதன் விளைவாக மேலும் 40000 வேளாண்மை நீர்க்குழாய்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப் படுமாம். இத்துடன் மொத்தம் 12 இலக்கம் குழாய்களுக்கு மின்சாரம் கிடைக்- குமாம்! ஆனால் அதே பொழுதில் கடந்த ஆண்டு (1987-88) திட்ட மிட்ட மின் ஆக்கத்தை 'ஏமாற்- றம் அளித்த திட்டம்' என்று கூறி அதற்குப் பருவ மழை பெய்யாமை யைக் காரணம் காட்டியுள்ளது அரசு! திட்டம் பல பல! அத்துடன் வெட்டிச் செலவுகளும் கோடி கோடி! பயனோ 'கறக்கிறது உழக் குப் பால்; உதைக்கிறது பல் போக' என்னும் அளவில்தான் உள்ளது!

இத்திட்டங்களால், இடையில் உள்ள அதிகாரிகளுக்கும் திட்ட மூலவர்களாக உள்ள அமைச்சர்- களுக்கும் போய்ச் சேரும் வரு மானங்களுக்குத் தான் வசதி வாய்ப்புகள்! பொது மக்களுக்கு என்னவோ, சுழியம்தான்!

குடிநீர்த் திட்டமா? கொள்ளையடிப்புத் திட்டமா?

தமிழக அரசு தீட்டும் பல்வேறு ஆரவாரத் திட்டங்கள் அனைத்தும் பொது மக்களை முன் வைத்துத் தீட்டப்படும் திட்டங்களே தொழில் மேம்பாடு, மருத்துவ வசதி, சார- வுணவு, இலவயப் பல்பொடி, கால் செருப்பு — முதலிய வற்றுக்கான திட்ட ஒதுக்கீடுகளோ ஆண்டு தோறும் கோடிக் கணக்கில்! இனி, மணலைக் கயிறுகத் திரிக்கவும், வானத்தை வில்லாக வளைக்கவும், மலைகளை மணலாகப் பொடிக்கவும் தாம் திட்டங்கள் போட வேண்டும். அவற்றுக்கும் வழி கண்டு பிடித்- தாலும் வியப்படைவதற்கில்லை

வரும் 1988-89-க்கான பொருளாண்டில் 'மருத்துவத்திற் கென்று 36 கோடியும், குடிநீர் வசதிக்கு 164 கோடி உருபாவும், நகரப்புற வளர்ச்சிக் கென்று 20 கோடி உருபாவும் தமிழக அரசு ஒதுக்கியுள்ளது. ஆனால், குடிநீர் குழாயில் வருவதில்லையே! சரக்கு வண்டியில் அன்றோ சாய்க்கடை நீர் வருகிறது! ஏழை மக்கள் நோய்களால் நாள்தோறும் நூற்- றுக் கணக்கில் செத்துக் கொண்டு தானே உள்ளனர். நகர்ப்புறங்- களில், நாளுக்கு நாள் எருமை களும், மாடுகளும் அன்றோ ஆயி- ரக் கணக்கில் பெருகி வளர்ச்சி யடைந்து வருகின்றன. சென்னை நகரச் சாலைகளில் அன்றாடம் கிடக்கும் சாணிகளை வாரி, இனி எருவாட்டி தட்டும் தொழிற் சாலை களை ஏற்படுத்தும் திட்டம் வந்தா- லும், பல கோடி உருபாக்கள் தமி- ழக அரசுக்குத் துணை வருமான மாகக் கிடைக்கும்! இதை எரி பொருள் அமைச்சர் கவனிப்பாரா?

அம்பிகா-இராதா திரைப்படம்! முதல்வர் தொடக்கிவைத்தார்!

சென்னையில், மலையாள நடிகைகள் அம்பிகா — இராதா

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

சிறப்பாசிரியர்:
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

ஆசிரியர்:
தென்மொழி மா. பூங்குன்றன்.

துணையாசிரியர்கள்:
தென்மொழி. கல்லை. அருட்செல்வன்
தென்மொழி. மா. பொழிலன்

கருத்தாளர் குழு.
பறம்பை அறிவன்,
தென்னவன் கோ,
தென்மொழி. மா. சித்திரச் செந்தாழை ஆறிறைவன்
தென்மொழி. ப. முருகவேள்,
குழந்தை. ஈகவரசன்,
வெங்காலூரர். பொற்செழியன்,
தென்மொழி துரை. தென்னவன்,
மா. செ. தமிழ்மணி,
புலவர்குமர. தன்னொளியன்,
கி. குணத்தொகையன்.

கட்டுரையாசிரியர் குழு:
பாவலர். கடலூர் மணிமாறன்,
பாவலர். இளஞ்சித்திரன்,
பாவலர். ப. எழில்வாணன்,
பாவலர். கொ. செ. சின்னப்பனார்,
தமிழ்ச்சுடர் மணிமுத்து.

உதவியாளர் குழு:
அழ. இளமுருகன்,
வியனரசு,
வே. கோ. வெற்றிச்செல்வன்,
நெடியோன்.

அச்சீட்டாளர்:
தாமரை பெருஞ்சித்திரனார்.
தென்மொழி மின் அச்சகம்.

கழக வேளிர்:
தென்மொழி. இரா. இளம்பிறைச் செல்வன் (பாலகங்காதரன்)

கழக அருளாளர்:
தென்மொழி. நா. இளமாறன்.

கழக அருட்கொடையாளர்:
தென்மொழி. ந. முத்துக்குமரன்,
தென்மொழி. மா. ஆறுமுகம்,
தென்மொழி. த. அரிமாவளங்கோ,
எசு. ஆர். எசு. பிரான்சிசு,
தென்மொழி. ஆறிறைவன்.

கட்டணம்:

	உள்நாடு	வெளிநாடு வான்	வெளிநாடு கடல்
தனியிதழ்	0-85	6-00	4-00
ஆண்டுக் கட்டணம்	44-00	320-00	220-00
அரையாண்டுக் கட்டணம்	22-00	160-00	110-00
வாணாள் உரு.	750	5000	3500

தொடர்பு முகவரி:
தமிழ்நிலம் சென்னை-600005.
தொலைபேசி: 847829

ஓய்ந்திடல் இல்லை, என் உள்ளமும், உணர்வும், உயிர்ச்செறிவும்
தேய்ந்திடல் இல்லை, என் விரல்களும் தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை, என் உடலும்; எனவே சலிப்பிலனாய்,
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன், உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்
உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு
சிறப்பாசிரியர்
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2018 சிலை (31-12-1987) இதழ் எண்-97

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இவரின் தனிப்பட்ட பத்திமை வேறு, அரசியல் கடமைகள் வேறு. அரசியல் கடமைகளை ஆற்ற வந்த விடத்தில் இவரின் தனிப்பட்ட மத ஆசைப் பாசங்களுக்கு இவர் இடம் தந்திருக்கக் கூடாது.

சங்கராச்சாரியார் ஒரு மதத்தலைவர் மட்டுமல்லர். பார்ப்பன இனத்தின் ஒட்டு மொத்தத் தலைவரும் ஆவார். இந்த வகையில் இந்தியாவில் உள்ள வேறு மடத் தலைவர் எவரையும் விட, காஞ்சியில் உள்ள இவருக்குத்தான் அதிகக் கவர்ச்சி உண்டு. அத்தகைய ஓர் இனவெறித் தலைவரை, இந்திய நாட்டின் தலைமையமைச்சரும், மற்றும் தலைமை, துணைக் குடியரசுத் தலைவர்களும் வந்து சந்தித்துப் பேசி, வழிபட்டுப் போகின்றார்கள் என்றால், இந்த நாடு ஒரு குடியரசு நாடு என்று சொல்லத் தகுந்ததா? ஞாயம் உண்டா? இப்படித்தான் இந்திரா காந்தியும் முன்னர் செய்து வந்தார்.

இவர்கள் செய்கின்ற வெளிப்படையான இம் மத ஈடுபாடுகளாலும் வழிபாடுகளாலும், இவற்றின் பெயரால் செய்யும் கருத்துக் கலப்புகளாலும் மக்கள் மனவியலடிப்படையிலும், அரசியலடிப்படையிலும் பலவகையான வெறுப்புகளையும் பகையுணர்வுகளையுந் தான் கொள்ளப் போகின்றார்கள்.

மேலும் இவர்கள் தங்கள் பச்சையான இந்துமதச் சார்பார்களாக் காட்டிக் கொள்வதால், இந்து மதத்தை அஃதாவது பார்ப்பன மதத்தை மறைமுகமாக ஊக்குவிக்கிறார்கள் என்றும், அதன் வழியாகப் பிற மதங்களைத் தவிர்க்கக் குறிப்புக் காடடுகிறார்கள் என்றும்-தாம் பொருள்படும். இது கண்ணாடி வீட்டிலிருந்து கொண்டு கல்லெறிவதைப் போன்றது.

நேரு சிலைதிறப்பு விழாவில், இராசீவ், ‘நேருவைப் பற்றிக் குறிப்பிடுகையில், “அவர் முழுமையாக மதச்சார்பின்மையைக் கடைப்பிடித்தார்” என்று பாராட்டினார். அவர் ஆட்சி நாளில், மதத்திற்கோ மதத் தலைவர்களுக்கோ இத்துணை ஆளுமை, அரசியல் தலையீடு, இருந்ததில்லை. இப்பொழுதுதான் இருக்க இருக்க, இந்தச் செயல்களின் வழி, ஆட்சி, பார்ப்பன ஆளுமையாகவே மாறி வருவதைப் பார்க்கிறோம். இஃது அவர்களுக்கும் நல்லதன்று; நாட்டின் எதிர் காலத்திற்கும் நன்றன்று என்று எச்சரிக்கின்றோம். மதம் ஆட்சிக் கட்டிலேறினால், ஆட்சி இருண்டு விடும் என்பது அழிக்க முடியாத உண்மை!

O

இந்திய பெண்கள் நிலை.

O இந்தியாவின் மக்கள் தொகையில் சரிபாதி பெண்கள் தொகை.

O 1951-ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட ஒரு கணக்கெடுப்பின்படி 7.89 விழுக்காடு படித்த பெண்கள். இது 1981-ஆம் ஆண்டு 24.29 விழுக்காடாக உயர்ந்தது. ஆனால் மக்கள் தொகைப் பெருக்கத்துடன் இந்த அளவை ஒப்பிட்டுப் பார்த்தால், 1951-ஆம் ஆண்டை விட, 1981-ஆம் ஆண்டில்தான் எழுதப் படிக்கத் தெரியாத பெண்களின் எண்ணிக்கை அதிகம். இதே நிலை தொடர்ந்து நீடித்தால், 21-ஆம் நூற்றுண்டின் முதல் கால்நூற்றுண்டுக்காலம் முடிவடைவதற்குள் இந்தியாவில் எழுதப்படிக்கத் தெரியாத பெண்களின் எண்ணிக்கை 25 கோடியாக உயர்ந்து விடக் கூடும்

O கல்வி கற்கும் மாணவர்களில், வறுமை உள்ளிட்ட காரணங்களால் தங்களது படிப்பைத் தொடர முடியாமல் நின்று விடுபவர்களில் எழுபது விழுக்காட்டுப் பேர் பெண்கள். குறிப்பாகச் சிற்றூர்ப் புறங்களைச் சேர்ந்த பெண்களும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்புகளைச் சேர்ந்த பெண்களும்.

O வேலைக்குச் செல்லும் பெண்களில் 80 விழுக்காட்டுப் பேர் கூலி உழவர், தொழிலாளர் போன்ற பணிகளைச் சிறு ஊதியத்திற்காகச் செய்து வருகின்றனர்.

O வேலைக்குச் செல்லும் பெண்களில் 100 க்கு இருவரே ஓரளவுக்கு நல்ல ஊதியம் பெறும் நிலையில் உள்ளனர்.

O அதிகம் படிக்கும் பெண்களுக்கு, அவளை விட அதிகம் படித்த மணமகனைத்தேடி, அதிக மாப்பிள்ளைப்பணம் கொடுக்க வேண்டுமே என்ற எண்ணத்தில், பெண் குழந்தைகளை அதிகம் படிக்க வைக்காதிருக்கும் மனநிலை உள்ளது.

O அரசியல் துறையில் கூட பெண்களுக்கு உரிய பங்கு கிடைக்கவில்லை.

O மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற அவைகளில் ஐந்து ஆண் உறுப்பினர்களுக்கு ஒரு பெண் உறுப்பினர் என்னும் விழுக்காட்டில் கூட இடம் பெறுவதில்லை. ஐ ஏ. எசு., ஐ. பி. எசு. போன்ற பதவிகளில் கூட 12 விழுக்காட்டு அளவுக்குத் தான் பெண்கள் தற்போது உறுப்பான்மை பெறுகின்றனர்.

— திருவாட்டி. **கோதை.**

துணைவேந்தர். அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம். சென்னையில் வெலிங்டன் சீமாட்டி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் திசு:9-இல் நடைபெற்ற 'மகளிர் கல்வியில் பல நோக்கு' பற்றிய கருத்தரங்கில் பேசியவை. 0

கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை.

தமிழகம் சிறப்புப் பெற்ற ஒரு நாடாகும். ஆரியர்களின் வல்லாளுமையின் போது அது தன் சொந்தக் கலைப்பண்பாட்டை விட்டு விடாமல் தக்க வைத்துக் கொள்ளும் வலிவுடன் இருந்தது. வெள்ளையரின் விடுபாட்டிற்குப்பின் ஒவ்வொரு தேசிய இனத்திலும் இருந்த அதிகார வகுப்பினர் (Bourgeois) இந்தியாவை மொத்தமாகவோ கூறு போட்டோ தங்கள் வல்லாளுமையை மக்கள் விழிப்படைவதற்குள் ஏற்படுத்திவிட பல்வேறு நடவடிக்கைகளை மேற் கொண்டனர். அதே போல் தமிழின அதிகார வகுப்பினரும் தென்மாநிலங்களை ஒன்றிணைத்துத் தனித் திராவிட நாடு அமைக்க முயன்றனர். இதில் மக்கள் நலன் கருதிய குமுகாய சீர்திருத்தக்காரர்களும் இணைந்தனர். தமிழ் நாடு தவிர்த்து மற்ற தென்மாநிலங்கள் இதனை ஏற்றிசையவோ, ஒத்துழைக்கவோ முன்வரவில்லை. இதற்குக் கரணியம் வடவர்களின் வல்லாளுமைக்குட்பட்டிருந்த மக்கள் திராவிடர்களின் ஒற்றுமை என்னும் பெயரில் மற்றுமொரு வல்லாளுமைக்கு உட்பட அணியமாக இல்லை.

அனைத்து மாநிலங்களும் தனி முழு முன்னேற்றத்தை விரும்பும் இக்காலங்களில் 'திராவிடத்-தான்' என்ற பழங் கோரிக்கை எடுபடாது. அதனால் தமிழ் மாநிலம் **'தனித் தமிழ்நாடு'** என்ற கோரிக்கையை முன் வைத்தது. தமிழகம் முழுவதும் இக்கோரிக்கையின் கீழ் ஒன்றிணைந்தது. இதற்கு எடுத்துக்காட்டே தி.மு.க. அ.தி.மு.க க்களின் உண்மையான வலு. எனினும் தமிழக அதிகார வகுப்புத் தலைமைகள் தங்கள் தந்நலன்களுக்காகத் தங்களுக்குள் முரண்பட்டுக் கொண்டன. அவர்கள் தங்களின் வலுவிற்காக வடநாட்டு அதிகார வகுப்பினருடன் சேர்ந்து கொண்டு தங்கள் துணையாளியைக் காட்டிக் கொடுத்தனர். இறுதியில் முடிவாகத் தமிழகத்தையே காட்டிக் கொடுத்தனர். தங்கள் தனித்தமிழ் நாட்டுக் கோரிக்கையை சிறிது சிறிதாகக் கைவிட்டனர். இந்திய அரசியல் சட்டத்துக்கு அடிபணிந்து வடநாட்டு அதிகார வகுப்பினர்க்காகப் பணி புரிந்து அவர்களின் கால்களில் விழுந்தனர். அதில் ஒரு பிரிவினர் தனித்தமிழ் நாட்டுக் கோரிக்கையை **'மாநில சுய ஆட்சி'** என்ற பெயரில் தமிழக மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

—ஆந்திரப்பிரதேச முற்போக்கு மாணவர் சங்கம் நடத்திய தேசிய இனச் சிக்கல் குறித்த ஆய்வரங்கில்—

1987-இல் திரு. **கிருட்டிணமூர்த்தியின்** கட்டுரையின் பகுதி. 0

பறம்பை அறிவன் பக்கம்!

பொதுமை - தமிழின ஒருமை! (ஒரு விளக்கம்.)

தொழிலாளர் ஊர்வலம் — உழவர் பேரணி — ஆசிரியர் அரசு ஊழியர் ஆர்ப்பாட்டம். — இவைகளில் எல்லாம்,

"உழைக்கும் மக்கள் ஓரினம்!
ஒன்றுபடுவோம்; போராடுவோம்!
போராடும் எங்களுக்குச்
சாதி இல்லை; மதமில்லை;
மொழி இல்லை; இனமில்லை.
கொள்கை உண்டு முழக்கம் உண்டு.
கோரிக்கைகள் பலவுண்டு ... !"

என்ற குரல்கள் எழுகின்றன. இவற்றை எழுப்பும் இய்க்கங்கள் முற்போக்கானவை. இவை பொதுமையின் சார்புடையவை, இதில் ஐயமில்லை.

ஆனால், தமிழின எழுச்சிக்கும் விடுதலைக்கும் போராடும் கருத்துடையவர்கள் இந்த இடத்தில் வேறுபடுகின்றார்கள்.

'மொழி இல்லை; இனம் இல்லை'

என்கிறார்களே, 'அவர்கள் ஊமைகளா; உதிரிகளா; தேசிய இனமானம் அற்றவர்களா' என்ற வினா வெழுப்புகின்றார்கள். இங்கே, நாம் 'பொதுமை'யைப் புரிந்து கொள்ளவும், 'இன ஒருமை'யை அறிந்து கொள்ளவும் சில செய்திகள் உள்ளன. அவற்றை அறிந்தாலே, இந்த, 'மொழி இல்லை; இனம் இல்லை' முழக்கத்தின் மெய்ப்பொருள் புரியும்!

ஓரின மக்கள் வாழும் நாட்டில் ஏற்றத் தாழ்வுகள் உள்ளன. இன்றுள்ள குமுக அமைப்பை மாற்றிச் சமன்மை — ஒப்புரவை உருவாக்குதல் உலகக் கடமையாகும். இது வகுப்புப் போராட்ட இறுதியில் நிகழக் கூடியதாகும். குமுகாய இயங்கியல் படிகளில் 'தேசிய இனவிடுதலை' ஒரு கட்டமாகும். இதற்கான வகுப்புக கிளர்ச்சிகள் வளர்ச்சியடைவது ஓரினத்தின் ஒப்புரவை உறுதி செய்ய உதவுவதே ஆகும்

இப் போராட்ட நேர்மையை ஓர்மையோடு ஒப்புக் கொள்ளுதல் பாட்டாளியக் கடமையாகும். தமிழின விடுதலையைப் பிற இனப் பாட்டாளிகள் ஆதரவளித்து வெற்றிக்கு உதவுவார்கள். இத் தகு போராட்டம் நிகழும் போது, 'மொழி, இன' வேற்றுமை கருதாமல் விடுதலைக்காகப் போராடும் அனைத்து மொழி இனமக்களும் ஒன்றுபட்டு நிற்பார்கள் என்பதே இம் முழக்கத்தின் மெய்ப் பொருள் ஆகும்.

நம் அரசியல் அமைப்புகள்!

தமிழ்நாட்டில் அண்மையில் இந்தியப் பொதுவுடமைக் கட்சியில் 'பிளவு' ஏற்பட்டுள்ளது. இந்தியக் கட்சியில் தமிழ் நாட்டில் மட்டும் 'பிளவு' ஏன்? 'ஒரே நாடு' என்ற கொள்கை, ஒரே மெய்ம்மம் என்ற ஏற்பாடு எல்லாம் தவிடு பொடியாகி விட்டனவா?

"தமிழில் சிந்திப்பதே தமிழர்க்கு விடிவைக் கொண்டு வரப் பண்ணும்" என்று இ. பொ. கட்சிக்காரர் சொன்னார் — ஆனால், 'இந்தியக் கட்சி' என்கிறார்! நானோ, அவர்க்குமேல் ஒருபடியாக நாம் 'உலகக் கட்சிக் காரர்கள்' (சர்வதேசிய வாதிகள்) என்றேன்! மாயமான்களை விரட்டிப் போய்ச் 'சீதை'யைப் பறிகொடுத்த இராமன்களாக இவர்கள் அல்லல் படுகின்றார்கள்!

தமிழ்நாட்டில் 'புரட்சித் தலைவரை'க் கண்டு பிடித்துப் பொதுவுடைமைக் கட்சிக் காரர்களுக்கு 'அறிமுகம்' செய்வித்த 'முதுபெரும் தலைவர்' கலியாணசுந்தரம், இன்று, கட்சிக்குள் உரிமைப் போராட்டம் நடத்துகிறார். இவர்களின் காலம் கடந்த அளவுக்குக் காரணம், தொலை நோக்கற்ற குறுகிய பார்வை யாதல் கூடும்! ஆனால், இவர்கள் பேச்சுக்குக் கூட இதனை ஒப்புக் கொள்ள மாட்டார்கள்! தமிழ்நாட்டு மக்களும் சரி, ஒவ்வொரு தேசிய இனப்பகுதி மக்களும் சரி, விண்ணில் பறக்கும் போது கழுகாக இருந்தாலும், மண்ணில் 'மண்புழுவாக' வாழ்ந்து மணம் பெறுங்கள்! 'புலிகளாக' நீங்கள் அப்போது மாற்றப்படும் காலம் வரும்!

ஆச்சாரியார் வடக்கே போய்த் தெற்கே திரும்பிய செய்தியைப் போட்டு விளம்பரம் செய்யும் இதழ்கள், இங்கே, மக்களுக்காக நடக்கும் இயக்கங்களை மண்மூடப் பண்ணிவிடும்! காவல்துறைச் செய்திகளை உலவ விட்டு, மக்களின் உண்மைப் போராட்டங்களுக்குக் கைவிலங்கு போடும் நாளிதழ்கள் தமிழ்நாட்டில் உள்ளன!

'கட்சிக்குள் இருந்தால் 'கண்ணியன்', ஏன் என்ற வினவெழுப்பி விடிவுக்காகப் போராடினால் 'இரண்டகப் பேர்வழி' ஆகாவரிப் பயல், ஊழல் பெருச்சாளி என்று பட்டம் கட்டி வெளியே தள்ளி, நடுத்தெருவில் அலையவிடும் அரசியல் அமைப்புகள் உள்ளன. அவ்ற்றை மக்கள் இனம் காட்டப் போவது உறுதி.

தி. மு. க; அ. தி. மு. க. கல்யாணசுந்தரம்!

தமிழுநாட்டில் அரசியல் தி. மு. க, அ. இ. அ தி. மு க கட்சிகளுக்குள் அகப்பட்டுக் கிடக்கிறது போலும். குறிப்பாக இந்தியப் பொதுவுடைமைக் கட்சிக்கும், இந்தியப் பொதுவுடமைக் கட்சி (மார்க்சியர்)க்கும் ஏற்பட்டு வந்துள்ள அவலம் இதனை உறுதி செய்கின்றது.

தி. மு. க விலிருந்து மா. கோ. இரா. வெளியேற்றப்பட்டார். அவருக்கு ஆதரவாக இந்தியப்

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம்)

தமிழ்த் தேசிய இனப் பகைவரும் பிசித் தீவும்!

—தென்மொழி. கரிகாலன்.

1987 மே திங்கள் 12-ஆம் நாள் பிசி நாட்டில் படைத்தளபதி இரபூகா என்பவர் திடீரெனப் படைத்துறையைக் கொண்டு ஓர் அதிரடிப் புரட்சி நடத்தி, ஆட்சியினைக் கைப்பற்றிக் கொண்டார். தலைமையமைச்சர் பவாத்ரா அவர் அமைச்சரவையினர் ஆகியோர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். (அவர் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். பிசியில் இருந்தால் தன் உயிருக்கு இரபூகாவினால் ஏதம் வரலாம் எனக் கருதி நியூசிலாந்து நாட்டில் அடைக்கலம் புகுந்தார். அங்கிருந்து இரபூகாவிற்கு எதிராகப் புரட்சி நடத்த முயன்று வருகிறார். முன்னாள் தலைமையமைச்சர் பவாத்ரா அவர்கள். இனி, இன்றைய நிலைமை வேறு.) இந்தச் செய்தி எல்லா இந்திய நாளேடுகளிலும் வந்தது. அதே நாளேடுகளில் பிசித் தீவின் படைத்தளபதி இரபூகாவின் புரட்சியைக் கண்டித்து இந்தியத் தலைமையமைச்சர் இராசிவின் கடும் கண்டனமும் வெளி வந்தன.

அவருடைய கண்டனத்தில் தங்கள் இனத்தவர்கள் (இந்திக்காரர்கள்) தாக்கப்படுகிறார்களே என்ற ஆற்றாமை வேகமும் துடிப்பும் காணமுடிந்தன. இந்த ஆற்றாமை வேகத் துடிப்புக்குக் காரணம பிசித் தீவில பெரும்பான்மையர்கள் உ. பி. காரர்கள் பிகாரிகள், வங்காளிகள் என்பதே. அதே நேரத்தில் ஈழ நாட்டில் சிங்களவர்களால் 1983-ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை ஆயிரக் கணக்கான தமிழ் மக்கள் கொல்லப் படுகிறார்கள். பெரியோர்கள் நடுஅகவையினர், இளையவர்கள், குழந்தைகள், தமிழ்ப் பெண்கள் சிங்கள அரக்கர்களால் கொல்லப்படும் கற்பழிக்கப்படும் காட்சிகள் அன்றாடம் நிகழும் நிகழ்ச்சிகளாகி விட்டன. குறிப்பாக 1984 மே 20-ஆம் நாளிலிருந்து சிங்களப் படைகள் யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றி, யாழ்ப்பாண தீபகற்பத்தைச் சுற்றி வளைத்து முற்றுகையிட்டதுடன், முப்படைத் தாக்குதலாலும் அரக்கத்தனமான குண்டு வீச்சுகளாலும் இதுவரை பல ஆயிரமாயிரம் தமிழ் மக்களைக் கொன்றுள்ளன. இன்று இறுதிக் கட்டமாக இலங்கைத்தீவில் தமிழினத்தையே அழித்துக் கொண்டு இருக்கிறார்கள், இந்தியப் படையும் சிங்கள அரக்கன் செயவர்த்தனாவும். இந்த வகையில் நம்மை ஆளுகின்ற இராசீவின் அரசோ ஈழத் தமிழர்களைக் காப்பது போல் நீலிக் கண்ணீர் வடித்துத் தமிழர்களிடத்தில் நடிக்கிறது. பிசித் தீவில் இரபூகாவின் திடீர் புரட்சியினால் வடநாட்டு இந்தியன் ஒருவனுக்கோ அவனது உயிருக்கோ உடைமைக்கோ சேதம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் இரபூகாவினால் இந்திக்காரர்கள் கட்சி கவிழ்க்கப்பட்டு விட்டதே என்று ஓலமிடுகிறார்கள் பிசித் தீவில் இன இணக்கம் தகர்ந்து இனக் கலவரம் ஏற்படும் என்று கூப்பாடு போடுகிறார், இராசீவ். மீண்டும் பிசித் தீவில் இந்திக்காரர்களுக்குச் சார்பான பவாத்ராவின் கட்சியை ஆட்சிக்குக் கொண்டுவரத் தம் அமைச்சரவையில் உள்ள மூன்று பேர்களை இங்கிலாந்து, ஆத்திரேலியா, நியூசிலாந்து நாடுகளுக்கு அனுப்புகின்ற இராசீவ் காந்தி, ஈழ தமிழர் நிலையில் மட்டும் இந்தச் செயல் வேகம் இல்லாதது ஏன் என்று தெரியவில்லை.

அவர்கள் அவர் இனத்தைச் சேர்ந்தவர்கள். இராசீவின் உடல் பிறப்புகள். தாம் ஆடாவிட்டாலும் தம் சதையாடும் என்று உடன் பிறந்த பாசத்துக்குக் காரணம் சொல்வார்கள். அந்த பாசம் இராசீவையும் ஆட வைக்கிறது.

இலங்கையில் மடிபவர்கள் யார்? தமிழர்கள். எனவே இராசீவினிடத்தில் பாசம் ஆடவில்லை. உ. பி. பிகாரி. தமிழர் யாவரும் அவர் கருத்துப்படி இந்தியவர்கள் தாம் இப்படிச் சொல்லித் தமிழர்களை ஏமாற்றுவது அவர்களுக்கு ஒரு கைவந்த ஒரு கலை. இதை நம்பித் தமிழர் ஏமாறுவதே அவர்கள் வழக்கம். தமிழரும் இதை, இந்தச் சூதினை, உணரமாட்டான், உணர்ந்துகொள்ள வேண்டுமே என்று முற்படவும் மாட்டார்கள்.

இந்திராவின் காலத்தில் இங்கிலாந்திலும், உகாண்டாவிலும் வடநாட்டுக் காரர்களுக்குத் தீங்கான சில சட்டங்கள் இயற்றப்பட்டன என்று அன்று இந்திரா அந்நாடுகளில் இந்தியர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள் என்று உலகநாடுகளிடம் முறையிட்டார். ஆனால், அதே நேரத்தில் 1965 இந்தியத் தலைமையமைச்சர் இலால்பகதூர் சாத்திரியும் இலங்கைத் தலைமையமைச்சர் திருவாட்டி. பண்டாரநாயகா அவர்களும் செய்துகொண்ட இலங்கைத் தோட்ட தொழிலாளர் ஒப்பந்தம் இலங்கைத் தமிழர்களை தாக்கியது. அடுத்து, பர்மாவில் படைத்துறையால் புரட்சி ஏற்பட்டு யூனு ஆட்சி அகற்றப்பட்டுப் படைத் தளபதி நீவின் ஆட்சி ஏற்பட்டபோது இலக்கக் கணக்கான தமிழர்கள் உடைமைகளை பர்மாவில் விட்டு விட்டு, ஆதரவற்ற நிலையில் ஏதிலிகளாகத் தாய்நாடு நோக்கி வந்த நேரத்தில், அந்தத் தமிழினத்தைக் காக்க யாரும் இல்லை. எங்கெல்லாம் தமிழினம் அடிப்பட்டுச் சாகும் போது, அந்தத் தமிழினத்தைக் காக்க எந்த ஆற்றலும் இல்லை, அன்றிலிருந்து இன்று வரை தமிழினம் கைவிடப்பட்ட ஆதரவற்ற நிலையில் தான் அதன் வாழ்வு இயங்கி வருகிறது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பவளத் தீவுகள், என்று கூறப்படுகின்ற மாலத் தீவுகள், சிறு சிறு திட்டுகள்

கூடிய பிசித் தீவுகள் தமிழர்களின் கடற்படைத் தளங்களாக விளங்கின. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் நிலத்தைப் சோழப்பேரரசு ஆண்ட போது அநுராந்தக சோழன் ஆட்சியின் போது கடற் கொள்ளையர்களால் தமிழகத்தின் கடல்வணிகம் தாக்குண்ட நேரத்தில், பிற்காலத்தில் இராச இராச சோழன் என்று பெயர் பெற்ற அருள்மொழி வர்மன் கடற் கொள்ளையர்களால் அழிக்கப்பட்டு வரும் தமிழகத்துக் கடல் வணிகத்தைச் செழிக்கச் செய்து நூற்றுக்கணக்கான மரக்கலங்களைக் கட்டுவித்து ஆயிரமாயிரம் தமிழ் இளைஞர்களுக்குக் கடற்போர்ப் பயிற்சி தந்து, பலநூறு மரக்கலங்களைக் கடலில் செலுத்திக் கடற் கொள்ளையரை வேட்டையாடி அழித்தான். அந்தக் கால கட்டத்தில் பவளத் தீவுகள் என்கிற மாலத் தீவுகள் பிசித்தீவுகள் ஆகிய தீவுகளில் கடற் கொள்ளையர்கள் மீண்டும் உயிர்த்தெழாதவாறு நிலையாக மரக்கலகங்களை நிறுத்தியதாக வரலாறு கூறுகிறது.

சோழப் பேரரசுக்குப் பின்னர், தமிழ் நிலத்தின் தமிழனின் வல்லாண்மை மிக்க ஒரு தமிழரசு இல்லாமல் போனதும், அறுநூறு ஆண்டுகள் தமிழினம் பலரால் அடிமைப் படுத்தப்பட்டமையால், தமிழ் நிலத்தின் பல பகுதிகள் இழந்து, இன்று தமிழ்நிலம் சுருங்கிவிட்டது.

பிசித் தீவு 18,274 சதுர மாத்திரி (கி. மீ) பரப்பளவு கொண்ட 361 தீவுகளும் 67900 மக்கள் தொகையையும் கொண்ட சிறிய நாடு. இயற்கை எழில் கொஞ்சும் தீவுநாடு. இந்நாட்டின் வேளாண்மையும் பொருளியலும், கரும்பு, தென்னை, நெல், கிழங்கு, வாழை, இஞ்சி முதலிய முதன்மையான வேளாண்மைப் பொருள்களைச் சார்ந்தனவாகும். சர்க்கரை, தேங்காய், எண்ணெய், கொப்பரை, வழலை, பைஞ்சுதை, பீர் வெண்சுருட்டு, மரம், தீப்பெட்டி, மீன பதனம் ஆகியவையும், சுரங்கக் கனிப் பொருள்கள் பொன, வெள்ளி ஆகியவையும் குறிப்பாக இந்நாடு இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யும் பொருள்களாகும். இங்கிலாந்தின் பாதுக்காப்பில் இந்நாடு வாழ்கிறது. பிசியில் காலடி வைத்த போது பல இனங்கள், பலவகைப் பண்பாடுகளுடன் நிலவின. வெள்ளையர் ஆட்சியில் இது மேலும் பெருகியது. இங்கு வளமான நிலம் இருப்பதைக் கண்ட வெள்ளையர் அரசு, தன் நாட்டுத் தேவையை நிறைவு செய்துகொள்ள விரும்பியது. எனினும் தீவில் வேளாண்மை செய்யப் பயிற்சி பெற்ற வேளாண் மக்கள் இன்மையால் ஒப்பந்தத் தொழிலாளர் முறையைப் புகுத்தியது. 1879-இல் வடநாட்டுப் பகுதியிலிருந்து ஏராளமான வடநாட்டுக்காரர்களை அங்குக் குடியேற்றி, கரும்பு, தென்னை பயிரிடப்பட்டன. இம்முறை 1917 வரை நீடித்தது. அதுவரை அங்கேயே 4000 பேர் நிலையாகக் குடியமர்ந்தார்கள். அந்தக் கால கட்டத்தில் இந்தியர்களை விட, பிசி இன மக்கள் மிக மிகக் குறைவே. பரந்தளவில் பிசியில் இருக்கவில்லை. இவர்களுக்குள் சில பிரிவுகளும் இருந்தன. ஒரு தலைமுறைக்கு முன்னர்தான் பிசி மக்கள் தங்களின் இன மொழிகளுக்கு வரிவடிவம்தந்து பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்கியுள்ளனர்.

1954-இல் பிசி நாட்டில் பிசி இன மக்களை விட இந்தியர்களின் எண்ணிக்கை மிகுதியாக இருந்தன. இவர்களுடன் ஐரோப்பியர்கள், சினர்கள், பாலத்தீனியர்கள், ஆங்கிலேயர்களும் குறிப்பிடத் தக்க எண்ணிக்கையில் இருந்தனர்.

பொருளியியல் துறையில் இந்தியர்களே பிசியைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்து இருக்கின்றனர்கள் தொழில்கள், வணிகம், வேளாண்மை ஆகிய துறையில் இந்தியர்களே முன்னணியில் இருப்பதும், பிசி இன மக்கள் எல்லாத்துறையிலும் பின்னால் தள்ளப்பட்டு இருப்பதுமே, அம்மக்களின் உள்ளக் கொதிப்பான இப்புரட்சிக்குக் காரணம்.

பிசி நாடு 1970 ஆம் ஆண்டு விடுதலை பெற்று, ரதுமார தலைமையில் இணைப்புக் கட்சி ஆட்சி நடத்தியது. கடந்த திங்களில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இணைப்புக் கட்சி தோற்றுப் பிசி கூட்டுக் கட்சியும், தொழில் கட்சியும் சேர்ந்து ஆட்சியைக் கைப்பற்றின. இவை முழுக்க முழுக்க, இந்தியர்களின் நலம் காக்கும் கட்சி. இக்கட்சியின் தலைவர் பவாத்ரா தலைமையமைச்சர் ஆனார்.

பிசி விடுதலை பெற்ற போதே உருவாக்கப்பட்ட பிசி நாட்டு அரசமைப்புச் சட்டம் மிகுதியான எண்ணிக்கை கொண்ட இந்தியர்களால் உருவாக்கப்பட்டது. அந்த அரசமைப்பில் இந்தியர்களுக்கு மிகுதியான உரிமைகளும் பிசி இன மக்களுக்குக் குறைவான உரிமைகளும் வழங்கியது. இந்த அரசமைப்பு முறையை ஒவ்வொரு பிசி இனத்தை சேர்ந்த ஒவ்வொரு பிசியினும் வெறுத்தான். எனவேதான் படைத்துறைத் தளபதிகளில் மூன்றாம் வரிசையில் இருந்த இரபூகா எனபவர் படைத்துறையின் ஆதரவோடு புரட்சி நடத்திப் பவத்ரா அவர்களின் ஆட்சியைக் கவிழ்த்தார். அவர், அரசமைப்பை முடக்கி வைத்துப் பிசி இன மக்களே மிகுதியான அரசியல் அதிகாரம் பெறும் வகையில் அரசமைப்பு உருவாக்க முயலுகிறார்.

இரபூகாவினால் உருவாகும் புதிய அரசமைப்பில் இந்தியர்களின் அரசியல் அதிகாரங்கள் குறைக்கப்படுவதை (வட) இந்தியர்கள் எதிர்க்கிறார்கள். எனவே இரபூகாவை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். நியூசிலாந்தில் அடைக்கலம் புகுந்துள்ள பவத்ரா அவர்கள் மீண்டும் தம்மைத் தலைமையமைச்சர் ஆக்க வேண்டும் என்று அந்நாட்டு ஆளுநரை வேண்டுகிறார்.

(தொடர்ச்சி 8-ஆம் புக்கம்)

இந்திய மக்கள் தொகை!

இந்தியாவின் மக்கள் தொகை சென்ற 40 ஆண்டுகளில் (அஃதாவது இந்தியா விடுதலை பெற்ற பின்னர்) இரண்டரை மடங்கு பெருகியுள்ளது. இன்று இந்தியாவின் மக்கள் தொகை 78 கோடியாகும். இஃது உலக மக்கள் தொகையில் 15 விழுக்காடாகும். ஆனால் உலக நிலப்பரப்பில் இந்தியாவிடம் 2.4 விழுக்காட்டு நிலமே உள்ளது.

கி.பி. 2010—இல் இந்தியாவின் மக்கள் தொகை சீனாவின் மக்கள் தொகையை விஞ்சி விடும். அன்றைக்கு இந்தியாவின் மக்கள் தொகை 157 கோடியே 10 இலக்கமாக இருக்கும்.

இந்திய மக்கள் தொகை ஆண்டு தோறும் 2.2, 2.3 விழுக்காடு 1.72 கோடி பெருகி வருகிறது.

இந்தியாவின், பீகார், அரியானா, நடுவண் பைதிரம் (மத்தியப் பிரதேசம்), இராசத்தான், உத்தரப் பிரதேசம் ஆகிய ஐந்து மாநிலங்களில் தான் மக்கள் தொகை வேகமாகப் பெருகி வருகிறது. இந்திய மக்கள் தொகையில் ஏறத்தாழ 40 விழுக்காட்டுப் பேர் இந்த ஐந்து மாநிலங்களிலுமே வாழ்ந்து வருகின்றனர். இவற்றில் மட்டும், ஆப்பிரிக்க நாடுகளில் உள்ள மக்கள் நெருக்கத்தை விடப் பன்மடங்கு கூடுதல் மக்கள் நெருக்கம் உள்ளது. இந்தியாவின் இறப்பு விழுக்காடு இந்த ஐந்து மாநிலங்களில்தான் மிகுதி.

இந்தியாவில் இப்பொழுதுள்ள மக்கள் பெருக்க நிலையில், 1990-ஆம் ஆண்டுக்குப் பின், இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெறும் யாருக்கும் அரசில் வேலை இல்லை என்று அறிவிக்கப் பெறலாம். 0

(7-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆளுநர் மறுத்ததால் வெடிலாவுத் தீவைத் தலைநகராகக் கொண்டு இந்தியர்களுக்கு எனத் தனிநாடு அமைப்போம் என்று ஆத்திரேலியா வானொலிக்குப் பவத்ரா பேட்டி அளித்துள்ளார். தனிநாடு கோரிக்கைக்கு இங்கிலாந்து ஆத்திரேலியா, நியூசிலாந்து, இந்தியா ஆகிய நாடுகளின் உதவியை அவர் நாடுகிறார்.

அதற்கு இந்தியாவும் மறைமுகமாக ஆதரவு தருவதுபோல் தெரிகிறது. பவாத்ரா தனி அரசு அமைத்தால் உறுதியாக இந்தியா அதனை வரவேற்கும். ஏற்றுக்கொள்ளும். அதே நேரத்தில் தமிழ் ஈழம் மலர்வது மட்டும் இந்தியாவுக்குப் பிடிக்கவில்லை. அதனை எதிர்க்கிறது. இந்நிலையில் தமிழன் செய்யப் போவது என்ன? இராசீவின் உள் நோக்கம் புரிந்து கொண்டு தமிழினம் சிந்திக்க வேண்டும். 0

இந்தியாவின் பெண் கொடுமை!

உடன்கட்டை ஏறிய பெண்

அண்மையில் இராசத்தான் மாநிலத்தில், செய்ப்பூரில் இருந்த ரூப் கண்வார் என்ற 18 அகவையுள்ள பெண், தன் கணவனுடன் உடன் கட்டை ஏறி எரிந்து போனாள் என்ற செய்தி அனைவரும் அறிந்ததே!

அவள் (17-1-87)-இல் திருமணம் ஆகி வாழ்ந்திருந்த மொத்தம் 231 நாள்களே. (மறைவு 4-9-97.)

இதில் அவள் தன் கணவனுடன் வாழ்ந்தது (அஃதாவது ஒன்றாக இருந்த நாள்கள்) பத்தே! பிறகு அவள் பெற்றோர் வீடு சென்று அங்கேயே இருந்தாள். திருமணம் ஆகும் போதே அவள் கணவன் ஒரு நோயாளி. எனவே அந்த 10 நாள்களிலும் கூட அவள் தன் கணவனுடன் முழுவதுமே மகிழ்ச்சியாக, இல்லறத் தொடர்பில், ஈடுபட்டிருந்தாள் என்று சொல்ல முடியாது.

பெற்றோர் வீட்டிற்குச் சென்றவள், அவன் இறந்து போவதற்குப் பத்து நாள்களுக்கு முன்பு தான் மீண்டும் கணவன் வீடு வந்திருக்கிறாள்.

ஆக, அவள் தன் கணவனுடன் ஒரே இடத்தில் இருந்தது மொத்தம் 20 நாள்களே! இப்படியான ஒரு பெண், அவனுடைய பிரிவாற்றாமையால் அல்லது அவன்மேல் இருந்த அன்பால் உடன்கட்டை ஏறி எரிந்து போனாள் என்பது கொடுமையிலும் கொடுமை! உண்மை என்ன? அவள் தீயில் தூக்கி வீசப்பட்டாள் என்பதுதான்!

இந்தியப் பண்பாடு என்பது இதுதானோ?

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொதுவுடைமைக் கட்சி குதித்தது. தோழர் கலியாண சுந்தரம், மா. கோ. இராவைப் 'புரட்சித்தலைவர்' என்று பாராட்டித் தள்ளினார். அவரை 'இலெனின்' போன்றவரென்றும் புகழ்ந்து பாடினார்.

அதன் விளைவுதானோ என்னவோ, கூத்தகுடி சண்முகம் கட்சி பிறந்தது. இப்போது சோவியத்தின் உண்மை ஆதரவாளன் நானே என்று கூறிக்கொண்டு, மேற்படி கலியாண சுந்தரம் 'தனிக்கட்சி' கட்டத் தொடங்கி விட்டார். குருட்டுத் தனமாகத் தி. மு. கவைப் பின்பற்றுகிறார், ப. மாணிக்கம் என்று கட்சித் தலைமையைத் தாக்குவதன் மூலம் அ. இ. அ. தி. மு. க விற்கு நன்றி பாராட்டுகிறார் கலியாண சுந்தரம்!

கலியாணசுந்தரம் தம்மை, தி. மு. க, அ. இ. அ. தி. மு. க விற்கு, 'மேற்பட்டவர்' என்று கூறிக்கொண்டாலும், 'அரசு'க்கு ஆதரவாக நிற்பவர் என்பதைப் பலமுறை நிறுவிக் காட்டியிருக்கின்றார்!

'போராட்டம்' உச்சத்தில் நடக்கப் போகும் வேளையில் 'தேர்தல்' நேரம் அரசுக்குத் தொல்லை கொடுத்தல் கூடாது என்ற கருத்துக் கூறியவர் தாம் கலியாணசுந்தரம்!

Scanned with CamScanner

செய்தி:

ஈழத் தமிழர் உரிமைப் பாதுகாப்புக் கூட்டமைப்பின் சார்பில் நடந்த ஈழம் எழுச்சி நாள்!

சென்னையில் உள்ள ஈழத்தமிழர் உரிமைப் பாதுகாப்புக் கூட்டமைப்பின் சார்பில், கடந்த 6-12-87 அன்று, **ஈழம் எழுச்சி நாள்** கொண்டாடப் பெற்றது.

அன்று காலை 10½ மணியளவில், மைலாப்பூர் திருவள்ளுவர் சிலையிலிருந்து, கூட்டமைப்பின் முகாமையர்கள் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்**, பேரா. **சாலை இளந்திரையனார்**, பேரா. **சாலினி இளந்திரையனார்**, அமைப்பாளர் சுப. **வீரபாண்டியன்**, பெருங்கவிக்கோ **வா. மு. சேதுராமன்**, பாவலர் **மு. மேத்தா**, பாவலர் **இன்குலாப்**, ஞானி, பாவலர் **சுரா**, செல்வி **அருள்மொழி**, வழக்கறிஞர் தென்னன் முதலியோருடன், நூற்றுக் கணக்கான பொதுமக்கள், தொழிலாளர்கள், பேராசிரியர்கள், மாணவ, மாணவியர், செல்வச் சிறுவர் சிறுமியர் கலந்து கொண்ட, நகரும் மக்கள் தொடரி (மனிதச் சங்கிலி) என்னும் புதிய முறை ஊர்வலம் ஒன்று புறப்பட்டு, வழி நெடுக, ஈழத்தமிழர் உரிமைப் பாதுகாப்பு முழக்கங்களை இட்டுக் கொண்டு மைலாப்பூர் தெப்பக்குளம் வடக்கு மாட வீதியில் உள்ள இலட்சுமி அம்மாள் திருமண மண்டபத்தைப் பகல் 12 மணியளவில் அடைந்தது.

மண்டப அரங்கு பிறகு நிறைவு பெற்றது. அதில் முற்பகல் நிகழ்ச்சியாக பேரா. **சாலினி இளந்திரையனார்** தலைமையிலும், **மணிமார்பன்** செயன்மையிலும், சிறுவர் சிறுமியரின் பாடல்கள், உரைவீச்சுகள், குழுப் பாடல்கள் ஆகியவையும், வினா விடை நிகழ்ச்சியும் நடந்தன. பின், கூட்டத்தினர் ஐயப் பாடுகளுக்கு **ஞானி, மனோ, சுரேசு** ஆகியோர் விரிவான விளக்கங்களை அளித்தனர்.

உணவு நேரத்திற்குப் பின்னர் பாவலர் **மு. மேத்தா** தலைமையிலும், **அரணமுறுவல்** செயன்மையிலும், நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. பாடல்கள், சேர்ந்திசை, கலைநிகழ்ச்சி, நாடகம், தருக்க மேடை, சிறுவர் உரையாடல் ஆகியன நடந்தன. தருக்க மேடையில் பேரா. **சாலை இளந்திரையனார்** அவர்களும், பாவலர் **இன்குலாப்** அவர்களும், கூட்டத்தினர் எழுப்பிய தடைகளுக்கு விடைகள் கூறினர்.

மாலை நிகழ்ச்சியாகச் சிறப்புக் கருத்தரங்கம் மாலை 6 மணியளவில் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** தலைமையில் நடந்தது. தலைவர் உரைக்குப் பின்னர் முற்போக்கு மாணவர் அமைப்புச் சார்பாக **விவேக்** அவர்களும், இந்திய மக்கள் முன்னணியைச் சேர்ந்த **நடராசன்** அவர்களும், தமிழ்நாடு மக்கள் கட்சி (சனதா) முன்னாள் பொதுச் செயலாளர் **பழ. கருப்பையா** அவர்களும் 'போர்க்களம்' இதழாசிரியர் **பாலசுந்தரம்** அவர்களும் கருத்துரையாற்றினர். திரு. பழ. கருப்பையா தம் உரையில், தாம் இருந்த மக்கள் கட்சி தமிழின நலம் சார்பில் போராடாது என்று தெரிந்த பின்னர் அதிலிருந்து தாம் வெளியேறி வந்து, இக்கால் தமிழ், தமிழின நலம் கருதி உழைப்பதை மிகவும் கருத்துப்பட எடுத்துரைத்தது குறிப்பிடத்தக்கது.

அனைத்து நிகழ்ச்சிகளும், ஈழத்தமிழர்க் கெதிராகப் போராடும் இந்திய அமைதிப் படை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற வேண்டும் என்னும் கருத்தமைந்த தீர்மானம் ஒருமுகமாக நிறைவேற்றுதலும், முடிவடைந்தன. தீர்மானத்தை அறிவித்து விளக்கம் சொன்னவர் கூட்டமைப்பின் அமைப்பாளர் சுப. வீரபாண்டியன். இறுதியில் ஞானி அவர்கள் நன்றியுரையுடன் நிகழ்ச்சிகள் இரவு 8 மணி அளவில் நிறைவுற்றன.

—நம் சிறப்புச் செய்தியாளர்.

ஆங்கில மையல்!

ஆங்கில மையலால் (மோகத்தால்) வெளிநாட்டாசையால், இளங் குழந்தைகளை வளர்க்காதீர்கள். பெரிதாக எதிர்பார்த்துப் பிற்காலத்தில் ஏமாற்றம் அடைந்து மனங்குலைவார்கள். நாட்டுப் பற்றின்றிப் பண்பாட்டு வேரின்றி நாடோடியாகி விடுவார்கள். இவ்வளவு ஆங்கிலக் காதல் நம் குழந்தைகட்கு எதிர்காலத்தில் பல கெடுதல்களைத் தரும் என்ற எச்சரிக்கையைப் பெற்றோர்கள் குறிப்பாகப் பணக்காரர்கள் உணர்வது நல்லது. வீட்டிலும், நாட்டிலும் பேசப்படாத ஒரு மொழியைப் பள்ளி மொழியாக இன்னும் வைத்துக் கொண்டிருப்பது பகுத்தறிவன்று, அடிமையின் தொடர்ச்சியாகும்.

இயல்பான செலவில் எல்லார்க்கும் தரமான கல்வி கிடைக்க வேண்டும். தமிழ் வழியாகக் கற்றால், எளிய செலவில் சுருங்கிய காலத்தில் கூடுதலான கல்வி புரிந்து கிடைக்கும். அறிவுக்கென ஓர் உயர்சாதி மொழியுண்டா? தமிழால் சொல்ல முடியும். அதற்குப் பள்ளி நுழைவு வேண்டும், இடங்கொடுக்க வேண்டும்.

—பேரா. வ. சுப. மாணிக்கனார்

Scanned with CamScanner

இந்திய இலங்கை ஒப்பந்தம்!

ஒரு கொள்ளைக்காரன்!
ஒரு கொலைகாரன்!
ஒரு சூழ்ச்சிக்காரன்!
ஒரு குரங்குப்படை!

இ'து ஒரு கொள்ளைக்காரனுக்கும், ஒரு கொலைகாரனுக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தம். இராசீவ் கொள்ளைக்காரன். செயவர்த்தன கொலைகாரன். இருவரும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள செய்துகொண்ட ஒப்பந்தம் இது. அவருக்குப் பிரேமதேசா போன்றவர்களிடமிருந்து எதிர்ப்பு இருந்தது. இருவரும் தங்கள் சிக்கல்களிலிருந்து தப்பிக்கவே இந்த ஒப்பந்தம் செய்து கொண்டனர். தாக்கப் பட்டிருந்த இலங்கைத் தமிழ் மக்களை இவர்கள் கண்டு கொள்ளவே இல்லை.

செல்வநாயகத்திற்குப் பின் அமிர்தலிங்கம் தலைமைக்கு அவரின் சூழ்ச்சி தொடங்கியது. போராளி அமைப்புகளையும் தூண்டி விட்டவர், அவர்தாம். எல்லாக் கேடுகளுக்கும் அவர்தாம் மூலவர். இந்த ஒப்பந்தத்தை எழுதியதற்குப் பின்னணி அமிர்தலிங்கந்தாம். அமிர்தலிங்கம் இருக்கிறார் என்ற துணிச்சலில்தான் இராசீவும் செயவர்த்தனவும் இந்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அமிர்தலிங்கத்தை வைத்தே போராளிகளையும் தமிழ் மக்களையும் இதற்கு ஒத்துப் போக வைத்து விடலாம் என்பது அவர்கள் நம்பிக்கை.

இந்திய அரசின் இந்த வேலைகளுக்குத் துணை போன தமிழக ஆட்சியாளர்கள் பற்றி, நான் ஓர் எடுத்துக்காட்டுச் சொல்கிறேன். எந்த அளவுக்குப் பொருந்துமோ எனக்குத் தெரியாது. இராமன், இராவணனைப் பிடிக்கக் குரங்கைப் பயன்படுத்தினான். இராசீவ் இலங்கையைப் பிடிக்க எம். சி. ஆரைப் பயன்படுத்தியிருக்கிறார்.

—டேவிட் ஐயா.

'கேடயம்' செய்தியாளர்க்கு அளித்த நேருரையில்.
'கேடயம்' திசம், '87

(11-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சிக்கு வந்தீர்கள். அதிகார வலிவை வைத்து கொண்டு விடுதலைப்புலிகளை வேருடன் அழிக்கப் பார்க்கின்றீர்கள். உங்கள் இனமாய் இருந்தால் இந்தச் செயலை நீங்கள் செய்விர்களா? தமிழர்கள் இடத்தில் என்றும் ஒற்றுமை உணர்வு வராது என்று இனிமேல் 'கனவு காணாதீர்கள். உண்மையான குடியரசு ஆட்சிக்கு மதிப்புக் கொடுங்கள்! விடுதலைப்புலிகளின் கோரிக்கைக்கு ஆதரவு கொடுங்கள்! தமிழர்களின் உணர்வை மதியுங்கள்! அவர்களுக்கு அவர்களின் உயிர் பெரிதன்று! அடிமையிலிருந்து மீளவே உறுதி பூண்டு விட்டார்கள்!

பேச்சும் செயலும்:

இராசீவின் ஆடம்பரம்!

இந்த ஆண்டு தாம் யாருக்கும் புத்தாண்டு வாழ்த்துகளை அனுப்பாமல் செலவைக் கட்டுப்படுத்தப் போவதாக இராசீவ் அறிவித்துள்ளார்.

'அறிவிப்பு மன்னர்' 'திட்டவேந்தர்' 'அரசியல் நடிகர்' என்ற வகையில் இராசீவை விஞ்ச இனி ஆள் கிடையாது!

இராசீவின் ஆடம்பரச் செலவு உலகப் புகழ் வாய்ந்தது. அவரைப் பாதுகாக்க நாளுக்கு ஒரு கோடி உருபா செலவிடும் இராசீவ் அண்மையில் தில்லிக்கு நெடுந்தொலைவில் உள்ள இராசத்தானில் அமைச்சரவைக் கூட்டத்தை நடத்திப் பொதுமக்களின் வரிப் பணத்தைப் பாழடித்தது, இலட்சத் தீவில் அவர் தம் பரிவாரங்களுடன் ஒய்வு கொண்டு செய்த கோடிக் கணக்கான உருபாக்கள்; கனடாவில் உள்ள வான்கூவர் மாநாட்டிற்குச் சென்ற பொழுது, வானூர்திக்கு மட்டும் செலவான 18 கோடி உருபாக்கள் — அடடா! என்ன ஆடம்பரம்! — இவர் போய்ச் சொல்லுகிறார், புத்தாண்டு வாழ்த்துகளை அனுப்பாமல் செலவுகளை மிச்சம் பிடிப்பேன் என்று! பொதுப் பணத்தை வாரி இறைப்பதில்தான் எத்துணைச் சிக்கனம் இராசீவுக்கு! பாருங்கள்!

நேருவின் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும்படி தலைமை அமைச்சர் இராசீவ் கேட்டுக் கொண்டுள்ளார். அதே சமயம், அவரின் மதச்சார்பின்மையை வலியுறுத்திப் பேசியுள்ளார்

ஆனால் இராசீவ் குருவாயூரில் தம் எடைக்கு எடை சருக்கரை நிறுத்துக் கொடுத்தும், காஞ்சியில் பிராமண மதப் பீடத் தலைவர்களைச் சந்தித்தும் தாம் ஒரு மத அடிமை என்பதை வெளிப்படுத்தியுள்ளார்! பாடுவது நேரு புகழ்! தேடுவது 'போஃபர்சு' 'ஃபேர்பாக்சு' கொள்ளை! 0

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த மூன்றாண்டுகளுக்கு முன் ஒரு திரைப்படப் பிடிப்பகத்தைக் (Studio) கட்டினர். அதையும் நம் முதல்வர்தாம் திறந்து வைத்தார். இப்பொழுது அந்நடிகைகள் பிடிக்க விருக்கும் 'ஆயித்தம்' என்னும் மலையாளப் படப்பிடிப்பையும் நம்(!) முதல்வர் தாம் தொடங்கி வைத்தார். ஒருவேளை அவர்களுக்குத் திருமணம் நடந்து 'தேனிலவு' நடந்தால், அதையும் இவர்தாம் தொடங்கி வைப்பாரோ, என்னவோ? முதல்வருக்கு மனம் மட்டும் பொன் இல்லை; கையும் பொன்தான்! அவர் பொற்கைகள் நடிகைகள் விட்டு நிகழ்ச்சிகளுக்காகவே உழைக்கும் கை, காக்கும் கை என்று செயல் படுவதற்காகவே, ஒரு நோபல் பரிசு கிடைத்தாலும் நாம் அதிர்ச்சி அடைய மாட்டோம். 0

Scanned with CamScanner

இராசீவே! தமிழர் உணர்வுக்கு மதிப்புக் கொடுங்கள்!

--வே. புகழேந்தி

தன்னவர் படையை இலங்கைக்கு அனுப்பி இலங்கைத் தமிழரை அழிக்கிறார் பச்சைப் பார்ப்பனர் இராசீவ். பகையாளிக் குடியை உறவாடிக் கெடுப்பதில் கைதேர்ந்தவர்கள் பார்ப்பனர்கள் என்பதை மெய்ப்பித்து விட்டார் இராசீவ். இலங்கை யாருடைய நாடு? இவர்கள் பாட்டன் வீட்டுச் சொத்தா, இராசீவ் பங்கு போட்டுக் கொள்ள? வீரந்துடன் பிறந்தவர்கள் தமிழர்கள்! அதனால் தான் இந்தியப் படையையே முழு முச்சுடன் எதிர்த்துக் கொண்டுள்ளார்கள். இராசீவே! உமக்கும் வீரம் இருக்குமானால் ஓரம் கட்டுங்கள் உம் படையை! விடுதலைப்புலிகள் எத்தனைப்பேர்? உங்களுடைய படைவீரர்கள் எத்தனைப்பேர்? இரண்டாயிரம் பேரை அடக்க ஐம்பதினாயிரம் பேரா? விடுதலைப் புலிகளின் கருவிகளின் வலிவு என்ன? இந்தியப் படைவீரர்களின் கருவிகளின் வலிவு என்ன? இதை அரசியல் அறியாத கல்லாதவன் கூட சொல்லுவானே! வானூர்தியை வானத்தில் செலுத்திக் கொண்டிருந்த இராசீவே! அண்டை நாடு! அண்டை நாடு என்று அலறிக் கொண்டு இருந்தீர்களே! இன்று எப்படி உனக்கு இலங்கை வேண்டிய நாடானது. இலங்கையில் மாடாய் உழைத்து ஓடாய்ப் போன தமிழர்களைக் நடுத்தெருவுக்கு வரவழைத்தது இன வெறி பிடித்த சிங்களவர்தாமே? இதை எதிர்த்துத் தமிழ்இன வீரம் செறிந்த இளைஞர்கள் தங்கள் உயிரைத் தூசென மதித்துத் தங்கள் இன அடிமையை ஒழிக்கக் கருவியேந்துவதைத் தவிர வேறு வழி இல்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். போராடிக் கொண்டிருக்கும் விடுதலைப் புலியை அழிக்க உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று செய்கிறீர்கள்! ஈழத் தமிழர்கள் ஈழ நாடு வேண்டும் என்று கேட்டது இந்தியாவையா? தமிழர்கள் என்றாலே அச்சப்படுகிறீர்களே, ஏன்? நீங்களும் செயவர்த்தனவும் சேர்ந்து கொண்டு தமிழர்களைத் திட்டமிட்டு அழித்துக் கொண்டு இருக்கிறீர்கள். ஒருமைப்பாடு, ஒருமைப்பாடு என்று சொல்லிக் கொண்டு உலக நாடுகளை நம்ப வைத்துத் தமிழர்களை என்றும் நிலையான அடிமை ஆக்குகின்றீர்கள்! உங்களிடத்தில் தமிழர்களுக்கு ஞாயம் கிடைக்கும் என்பது ஒரு போதும் நடக்காத செயல். ஆட்டை வெட்டுவதற்குத் தழையைக் கொடுத்துக் கூப்பிடுவது போல, அங்குள்ள தமிழர்களுக்கு — உணவு கொடுக்கின்றீர்கள் — ஏதுமறியாத மக்களுக்கு.

தமிழகத்தில் உள்ள அரசியல் தலைவர்கள் சில பேர் என்றும் வட நாட்டவர்க்குக் கால் பிடிப்பதையே வேலையாகக் கொண்டவர்கள். அடிமைத் தனத்தை நிலையாக ஆதரிக்கும் அரசியல் தமிழின இரண்டகர்கள். பதவி, பதவி என்று வெறிபிடித்து அலையும் நாயாசை கொண்டவர்கள். இவர்களுக்குத் தமிழ் மொழியைப் பற்றியோ, தமிழ் நாகரிகங்கள் பற்றியோ தெரிந்திருந்தாலும், அவற்றைப் பற்றி அன்றும் கவலைப் படாதவர்கள். இத் தலைவர்களைப் பற்றித் தெரிந்துதான் இராசீவ் இப்படியெல்லாம் நடந்து கொண்டு இருக்கிறார். இங்குள்ள தமிழினத் தலைவர்களோ தமிழின விடுதலைக்குப் பாடுபட என்றும் ஓர் அணியில் சேரமாட்டார்கள். இவர்கள் எந்த நேரத்தில் கட்சி நல அரசியல் பேச வேண்டும், எந்த நேரத்தில் பேச கூடாது என்று தெரிந்தும் பேசுகிறார்களே? ஏன்? தமிழ் மக்கள் இளித்த வாயர்கள் என்று கணக்கு போட்டு அரசியல் சொக்கட்டான் ஆடிக் கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் ஆட்டம் எத்தனை நாள்கள் நடக்குமோ? நடக்கட்டும். தமிழ் மக்கள் முற்றிலுமே அழிந்த பிறகு எந்த மக்களை வைத்துக் கொண்டு அரசியலை நடத்தப் போகிறார்களோ, தெரியவில்லை. இங்கே, தமிழ்நாட்டில் தமிழ் இனத்தைச் சிறுபான்மைப் படுத்தியும், பொருளியலால் சுரண்டியும் எடுத்துக் கொண்டு போகிறார்களே வடவர்கள். இதைத்தட்டிக் கேட்குமாறு இங்குள்ள தமிழ் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த இவர்களால் முடிய வில்லையே? இதைப்பற்றி எப்போது தான் பேசப் போகிறார்களோ, அதுவும் தெரிய வில்லை.

இந்த நிலையில் இராசீவிற்கு ஒரு வேண்டுகோள்! இங்குள்ள உண்மையான உணர்வு உள்ள தலைவர்களை அழைத்து ஈழத்துக்கு ஒரு முடிவான தீர்வைக் காணுங்கள். இல்லையென்றால், இராசீவே! நீங்கள் செய்யும் செயல்கள் அத்தனையும் வீண்! நீங்கள் செய்த செயலை மறந்து, செய்யப் போவதை நினைத்து, அடக்கத்துடன் நடவுங்கள்! அரசியலில் நீங்கள் ஒரு கற்றுக்குட்டி. காந்தியம் பேசுவதால் தமிழர்கள் என்றும் நம்ப மாட்டார்கள். சீக்கியர்கள் இந்திய விடுதலைக்குப் பாடுபட்டது போல் உங்கள் குடும்பத்தில உள்ளவர்கள் ஏதும் செய்ததாகத் தெரிய வில்லை

அமைதிவழி, அமைதிவழி, என்று சொல்லி ஏமாற்றி அடக்குமுறை ஆர்ப்பட்டம் நடத்துகிறீர். முறையான அரசியலை நடத்துங்கள். அல்லது உங்கள் பாட்டன் வீட்டுச் சொத்தை வைத்துக் கொண்டு உங்கள் வாழ்க்கைக் காலத்தைக் கடத்துங்கள். எந்த நாட்டில் விடுதலைக்குப் போராடினாலும் அந் நாட்டு விடுதலைக்கு ஆதரவு தருவது தானே இந்தியாவின் கொள்கை? இவையனைத்தும் ஈழச்சிக்கலில் தலை கீழாக இருக்கிறதே, ஏன்? இது என்ன நேர்மை, இராசிவே? அரசியல் நேர்ச்சியால்

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

தமிழினமே, தமிழினமே...

அடிவானத்தைத் தொடவோ,
உன்னை அழைக்கிறேன்... இல்லை.
விடிவு பெறும் நேரம், நீ
விழிகளை மூடிவிடாதே என்று
எச்சரிக்கவே, அழைத்தேன்!

தாய்தந்த அமிழ்தப்பால்
திரண்டு விடுவதோ?
ஆவின் திரட்டுப்பால் சுசப்பாவதோ?

உன் சாரத் தமிழைச்
சக்கையென எறிவதோ?

தோள்மேல் கிளி தொற்றலாம்;
தமிழர் உலகினை உறவாக்கிடலாம்;
அடிமைப்படுத்திடத் தமிழினம்
அடங்கிப் போவதா? பகைவர் நம்
தோள்மேல் ஏறித் துவட்டிட ஏற்பதா?

பாட்டாளியின் பசுந்தமிழை
இந்தியும் ஆங்கிலமும்
ஏறி முறிப்பதா? -இதைக்
கொடுமைக்கு எதிராகக்
கொதித்தெழும்
பாட்டாளிகளின் உலகம்
பார்த்து மகிழுமா?

எனவே, தமிழினமே, நீ
தனியன்று — உன்பின்
தரையுலகமே உள்ளது! எழுக!

--பறம்பை அறிவன்.

இராசீவ் 'சோசலிச' உளறல்!

பேச்சும் செயலும்:

'நமது நிகரமை (சோசலிச)க் கொள்கை தற்சார்பு, ஏழைகளின் மீது அக்கறை, பொருளாக்கப் பெருக்கம், ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது' என்று கதை விட்டிருக்கிறார், இராசீவ், சத்தியமூர்த்தியின் சிலை திறப்பு விழாவில்!

அடடா, பேச்சில்தான் எத்துணை கனிவு! குழைவு! ஏழைகள் மேல்தான் யாருக்குமே இல்லாத எத்துணை அக்கறை! மக்கள் வரிப் பணத்தில் கட்டப்படும் தொழிற்சாலைகளையும், மின் நிலையங்களையும் ஏழைகளுக்கு 'அர்ப்பணம்' செய்வதாக (ஒப்படைப்பதாக)க் கூறிவரும் தொல் 'விளையாட்டுகள்' (சொற் சாலங்கள்) தாம் என்ன!

அரசியல் திருடன், அதிகார வெறியன், வல்லாண்மைக் கொடியன் — 'வேதாந்தம்' பேசுவது, கொள்ளைக் காரர்கள், கொலைஞர்கள் புத்த உடை உடுத்துவதைப் போன்றது! இக் கொடுமைகளுக்குக் காலந்தான் முற்றுப்புள்ளி யிட வேண்டும். 0

தமிழக முதல்வர் மறைவு!

தமிழக முதல்வர் மறைவு குறித்த ஆசிரியர் கருத்துரையை இம் மாதத் தென்மொழி (சு: 23; ஓ: 12) ஆசிரியவுரையில் காண்க!

உ.த.மு.க. வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 61

அரசமைப்பில் ஒருவன் மக்களைக் கொள்ளையடிக்கிறான். குடியரசமைப்பில் பலர் கொள்ளையடிக்கிறார்கள்.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண். 97. TN/MS (C) 657

நூல் அஞ்சல்

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5, அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5
தொலைபேசி எண்: 847829;

உறுப்பினர்:
ஆண்டுக் கட்டணம் உரு. 44-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 22-00

பெறுநர்:
திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5